**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

OS. No. 233/2011
பக்கம்
PW1 சுதாகார் பிரசாத்

**பிரவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சென்னை தான் என்னுடைய பூர்வீகமாகும். தற்போது நான் வீட்டில் தான் இருந்து வருகிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் நான் வட்டிக்கு பணம் கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. தெரிந்தவர்கள் யாரையும் என்னிடம் பணம் கேட்க நான் பத்திரம் வாங்கிக்கொண்டு பணம் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு ஒரு இடை தரகர் மூலமாக பழக்கமாகும். வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் நான் துணிகளை ஏற்றுமதி செய்யும் வேலை பார்த்து வந்தேன். அதற்கு முன்னார் நன் ராணுவத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிடேன். பிரதிவாதி என்னிடம் இருந்து ரூபாய் 1,50,000/– வாங்கியுள்ளார். இது நாள் வரையிலும் பிரதிவாதி அதில் எந்த ஒரு தொகையும் திருப்பி தரவில்லை. 3 முறை நான் பிரதிவாதியிடம் நான் கொடுத்த 1,50,000/– திருப்பி தர நேரில் கேட்டு இருந்தேன். பிரதிவாதியின் கணவர் பெயர் சிவபூசனமாகும். தாவா சொத்தை தேவகியும், சிவபூசனமும் ஒன்றாக தான் விற்பணை செய்ய இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். வா.சா,ஆ.1 ஆவணப்படி சொத்தின் விஸ்திரணம் 73 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் சொத்து பட்டியலின் சொத்தின் விஸ்திரணம் 78 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது 78 செண்ட் நிலம் தொடர்பாக தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணப்படி அதில் கண்டுள்ள ரூபாய் 1,50,000/- ஐ பிராதிவாதியின் கணவர் சிவபூசனம் பெற்றுக்கொண்டதாக தான் குறிப்பிடப்படபட்டுள்ளது என்றும் பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதாான். அதன் காரணமாக தான் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதியின் கணவருக்கும் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பினை சிவபூசனத்திற்கு அனுப்பிறதற்கான எந்த ஒரு அஞ்சலக ரசீதோ ஒப்புகை அட்டையோ நான் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு அனுப்பட்ட அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆவணப்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இருந்து அவர் காலி செய்யப்பட்டு விட்டதாக திருப்பட்டுவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் 31.08.2010 அன்று திருப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணப்படி தான் பிரதிவாதி அவர் கொடுத்த விலாசத்தில் வசித்து வரவில்லை என்ற விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். ஆனாலும் பிராதில் பிரதிவாதியின் விலாசத்தை வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை குறிப்பிட்டு தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரைய முன்தொகையாக எழுத்தால் ரூபாய் 1 லட்சம் என்றும் எண்ணால் ரூபாய் 10,000/-என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 13.10.2008 அன்று ஏற்படுத்தப்பட்டது 30 நாட்களில் அது காலாவதி ஆகிவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 30 நாட்களுக்குள் நான் பணத்தை கொடுக்க தயராக தான் இருந்தேன். பட்டா பெயர் மாற்றம் செய்யபட வேண்டி இருந்த காரணத்தினால் அதற்காக ருப்பாய் 50,000/- என்னிடம் கேட்டு நான் கொடுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் அது குறித்து எழுதப்பட்டுள்ளது. 30 நாட்களுக்குள் நான்

பணம் செலுத்த தயராக இருந்தனை காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த 30 நாட்கள் காலத்திற்குள் என்னிடம் கிரையம் ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீத தொகை இருந்தனை காட்ட என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் அல்லது கணக்கு பட்டியல் உட்பட எந்த ஒரு ஆவணத்தையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 30 நாட்களுக்குள் பிரதிவாதிக்கு பாக்கி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் ஏற்படுத்தி கொடுக்க நான் எந்த ஒரு அறிவிப்பும் அவருக்கு அனுப்பினேன் என்றால் இல்லை. ஆனால் வாய் மொழியாக தான் கேட்டேன். 01.12.2008 அன்று தான் நான் பிரதிவாதியிடம் வாய்மொழியாக பாக்கிபணத்தை பெற்றுக்கொண்டு கிரையம் ஏற்படுத்தி கொடுக்க கேட்டதாக பிராதில் குறிப்பிட்டு சொல்லியுளேன் என்றால் சரிதான். பட்டா பெற்றுக்கொண்டு கிரையம் செய்துக்கொடுப்பதாக பிரதிவாதி கூறியதாக பிராதிலும் என்னுடைய முதல் விசாரணையிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த விவரத்தை வா.சா.ஆ.2 அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பினை வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டு 2 வருட காலம் கழித்துதான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்புடன் நான் பாக்கி கிரைய தொகையை வரையோலை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ இணைத்து அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பு கொடுத்து 8 மாதங்கள் கழித்தான் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்ழக்கை தாக்கல் செய்தபோதாவது பாக்கி கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வோ அல்லது கைப்பீடு செய்ய அனுமதிகோரியும் எந்த ஒரு நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை

என்றால் சரிதான். இவ்வழக்கு பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பவில்லை என்ற காரணத்தினால் 08.09.2011 அன்று தள்ளுபடி செய்யபட்டு 24.07.2023 அன்று மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2023 ம் ஆண்டிற்கு பின்னர் தான் பிரதிவாதி இவ்வழக்கில் ஆஜராகியுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கு தள்ளுபடி செய்யபட்டு மீண்டும் கோப்பிற்கு எடுக்கபட்ட அந்த இடைப்பட்ட காலத்திற்குள் 19.11.2021 அன்று தாவா சொத்தை பிரதிவாதி அவருடைய மகனின் பெயருக்கு செட்டில் மெண்ட் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான். செட்டில் மெண்ட் செய்யப்பட்ட விவரம் 2023 ம் ஆண்டு எனக்கு தெரியவந்தது.

(பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/−K.S.அருண்சபாபதி,

முதன்மை சார்பு நீதிபதி,

காஞ்சிபுரம்.